**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 5 August 2024

# அறிவுத்தளத்தின் உச்சாணிக்கொம்பில்



கௌதம் விஜயன் குமரன், அனன்யா மதுர் இருவருடனும் அவர்களின் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். **படம்: பே. கார்த்திகேயன்**

**கி. ஜனார்த்தனன்**

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் யேல்-என்யுஎஸ் கல்லூரியில் விருது பெற்றுள்ள மாணவர்கள் இருவரைத் தமிழ் முரசு பேட்டி கண்டது. உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் இவர்களது கல்விப் பயணம் தொடர்கிறது.

## ஆய்வாளரும் உணர்வும்

அரசியல், பொருளியல், மெய்யியல் பாடத்தில் இளநிலைப் பட்டப் படிப்பை முடித்துள்ள அனன்யா மதுர், அடுத்து கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் மேற்கொள்ளவுள்ளார்.

உயர்நிலைப் பள்ளியில் வரலாற்றின்மீது கொண்ட மோகம், பின்னர் மானுடவியல் கல்விக்கான கதவுகளையும் அவருக்காகத் திறந்து வைத்தது.

“அமெரிக்காவுக்கும் முன்னாள் சோவியத் யூனியனுக்கும் இடையிலான பனிப்போரைப் பற்றி என் ஆசிரியர் சுவைபட விளக்கியதால் என் ஆர்வம் கூடியது. வெவ்வேறு மூலங்களை ஆராய்ந்து மாறுபட்ட கண்ணோட்டங்களை அறியும் கலையைக் கற்றோம்,” என்று அனன்யா சொன்னார்.

வரலாற்றின் மூலம் கொள்கை வகுப்பைப் பற்றியும் அறநெறிகளைப் பற்றியும் அனன்யா ஆராயத்தொடங்கினார்.

சமூக நீதி பற்றிய ஏட்டுக்கல்வியை நுணுகி ஆய்ந்த அனன்யா, பலதரப்பட்ட மக்களுடன் பேசி அவர்களது அனுபவங்களிலிருந்தும் பாடம் கற்றார்.

வெளிநாட்டு ஊழியர்கள், பாலியல் தொழிலாளர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டபோது கொவிட்-19 கிருமிப்பரவலின்போது அவர்கள் அனுபவித்த துன்பங்களைப் பற்றி அறிந்து ஆய்வு செய்தார்.

“ஊழியர்கள் கூறிய தகவல்கள் மட்டுமன்றி அவர்களது உணர்வுகளையும் உள்வாங்கினேன். ஆய்வாளருக்கு மூளை எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு உணர்வும் முக்கியம்,” என்கிறார் அனன்யா.

என்யுஎஸ் அரசியல், பொருளியல், மெய்யியல் மன்றத்தில் தலைவராகவும் ஆசியப் பல்கலைக்கழக மாணவ உச்சநிலைக் கூட்டத்தில் உறுப்பினராகவும் இவர் செயல்பட்டுள்ளார். சையது அகமது கான் ஏஎம்யு நினைவுப் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு தமது முனைவர் படிப்பைத் தொடங்கும் ஆவலில் உள்ளார் அனன்யா.

## ‘பலதுறை அறிவைப் பெருக்கலாம்’

விரும்பிய பாடத்தைப் பயில வாய்ப்பு கிடைக்காத நிலையில் கிடைத்த படிப்பை விரும்பிப் படித்தார் கௌதம் ராஜ்குமார்.

அவரது திறந்த மனமும் நேர்மையான செயல்பாடும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பயிலும் அரும்வாய்ப்பை பெற்றுத் தந்துள்ளன.

நன்யாங் பலதுறைத் தொழிற் கல்லூரியில் உயிர் மருத்துவப் பொறியியல் படிப்பைத் தன் தாயாரின் பரிந்துரையில் தேர்ந்தெடுத்த இவர்,

பன்முகத்தன்மைமிக்க கல்விச் சூழலில் சோதனைகள் இருந்தாலும் அவை இறுதியில் சிந்தைக்குச் செறிவூட்டியதாக கௌதம் கூறினார்.

“பொறியியல் துறை மாணவனாக இருந்தாலும் உளவியல், மெய்யியல் சார்ந்த வகுப்புகளிலும் இருந்தேன். முற்றிலும் மாறுபட்ட துறையைச் சேர்ந்த மாணவர்களுடன் பணியாற்றிய அனுபவமும் என் கண்ணோட்டத்தை விரிவுபடுத்தி, கற்றல் அனுபவத்தை மேம்படுத்தியது,” என்று இவர் கூறினார்.

பல்கலைக்கழகத்தில் தலைமைப் பொறுப்புகளை விரும்பி ஏற்றார் கௌதம். தலைவர்கள் பலரைச் சந்திக்கும் வாய்ப்புகளைப் பெற்று, தமது தொடர்பு வட்டத்தை விரிவுபடுத்தினார்.

பல்கலைக்கழகக் கல்விமான்கள் மன்றத்தில் 21ஆம் தலைவராக இருந்து, யேல்-என்யுஎஸ் வளாகத்தின் திட்டமிடலிலும் இவர் ஈடுபட்டார்.

மின்னிலக்கமயமாதலால் சிங்கப்பூரின் உணவுக்கடைக்காரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு பற்றிய பணித்திட்டம் தம் நினைவில் சிறப்பிடம் பிடித்திருப்பதாகக் கூறினார்.

“கொள்கையை வகுப்போருக்கும் கொள்கை முடிவுகளால் பாதிக்கப்படுவோருக்கும் இடையே இடைவெளி அவ்வப்போது ஏற்படுகிறது என்பதற்கு உணவங்காடிகளின் நிலை ஓர் எடுத்துக்காட்டு,” என்று அவர் கூறினார்.

அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழத்தில் கல்வி, தலைமைத்துவம், நிர்வாகம் மற்றும் தொழில்முனைப்புத் துறையில் முதுநிலை பயிலும் இவருக்கு, சிண்டா-சிக்கி கல்விமான் விருது கைகொடுத்துள்ளது.

“பல்கலைக்கழகப் படிப்பைப் பயில்பவர்கள் தங்கள் கல்விக்கு முழுப் பொறுப்பு ஏற்கவேண்டும். இதைக் கருத்தில்கொண்டு செயல்படப் பழகிக்கொள்ளுங்கள்,” என்கிறார் கௌதம்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.